இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்ட கற்கைகள் திணைக்களம்

சட்டமானி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 6

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU4325 / LLU6717 - சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 19-02-2020 நேரம் : பி.ப 1.30 - பி.ப 4.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு.(08)

ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. " ஆயின் இந்த விதிமுறையான ஒருமைப்பாடு பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான முறையான அந்தஸ்து மீதான ஆழமான மற்றும் நீடித்த உடன்படிக்கையை குறித்துக் காட்டுகிறது. இந்த உரிமைகள் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை விட பொருத்தமான பெறுமதி பதவணி மற்றும் காலவரிசைப்படியான விதிகள் என்பன தொடர்பில் மேலோங்கி உள்ளது என்ற ஒரு கருத்தை ஒரு சாரார் அதிகமாக கொண்டுள்ளனர். கல்வியறிவற்றவர்கள் மற்றும் பட்டினியால் துன்பப்படுபவர்களுக்கு பேச்சு சுதந்திரத்திற்கு உரிமை இருப்பது என்ன பிரயோசனம்?
மறுவகையில் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் எப்போதும் (முறையாக விளங்கிக் கொண்டவாறு) உரிமைகள் என்பதாக அமையாது என்ற இன்னுமொரு கருத்தை நாம் காண்கின்றோம்.

Henry J Steiner , Philip Alston and Ryan Goodman (2008) *International Human Rights* in context, 3rd edition. Oxford : Oxford University Press, p. 237

சர்வதேச மனித உரிமைகள் பட்டயத்தில் இந்த இரு வகையான உரிமைகளும் எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை ஒப்பிட்டு வேறுபடுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் மீது கருத்துரை வழங்குக.
உண்மையான வாழ்க்கையில் இருக்கக்கூடிய உதாரணங்களைப் பயன்படுத்தி ஏன் அனைத்து மனித உரிமைகளும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்க முடியாதது, ஒன்றை ஒன்று தங்கியிருக்கின்றது மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக இருப்பதாக கருதப்படுகின்றது என்பதை ஆராய்க.

(20 புள்ளிகள்)

2. சர்வதேச மட்டத்தில் தனிநபர் குற்றவியல் பொறுப்புடமை என்கின்ற கருத்தேற்பின் தோற்றம் மற்றும் வளர்ச்சி என்பவற்றறைக் கண்டறிந்து சர்வதேச குற்றவியல் நியதிச்சட்டம் ( The Rome Statute) (1998) எவ்வாறு இந்த கோட்பாட்டிற்கு வலு தருகிறது என்பதை ஆராய்க. சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புடமை ஏற்படுத்துவது ஏன் உலகளாவிய அளவில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக உள்ளது என்பதை விளக்குக.

(20 புள்ளிகள்)

3. உலகளாவிய சமய நம்பிக்கைகள் அல்லது கோட்பாடுகளை கட்டியெழுப்புவதற்கான முயற்சி அல்லது ஒரு குறிப்பிட்ட சமய நம்பிக்கை அல்லது கோட்பாட்டை உலகளாவியதாக சமர்ப்பிப்பது உலகத்தை அழிக்கின்ற ஆபத்தை அல்லது வெவ்வேறான விடயங்களை அழிப்பதற்கான சாத்தியப்பாட்டை உருவாக்கும் ஒரு உலகளாவிய ஆணையை கோருவது ஒரு மிகவும் தந்திரமான திட்டம் ஒன்றாகும்கும், அவ்வாறு இல்லையெனில் ஒட்டுமொத்தமாக அது சாத்தியமற்றதாகும். எனவேதான் மனித கௌரவம் என்பது எதனை உள்ளடக்கும் என்பதற்கான ஒரு சர்வதேச உடன்பாட்டை எட்டுவதற்கான முயற்சியானது நுட்பமான, திறந்த மனப்பான்மையுடன் மற்றும் அது பெற்றுக்கொள்ள வேண்டிய குழப்பகரமான சூழ்நிலைகள் என்பவற்றுடன் அணுகப்பட வேண்டும்.

- Makau Mutua.(2002). Human Rights: A Poltical and Cultural Critique. Philadelphia: Pennsylvania University Press.

மேலே தரப்பட்ட கூற்றை மனித உரிமைகளுக்கான உளகலாவிய கோரிக்கை மற்றும் கலாசாரா சார்புவாதம் என்பதன் மீது அமைந்துள்ள எதிர்கோரிக்கைகள் என்பவற்றிற்கு இடையிலான வாதத்தின் பின்னணியில் விமர்சித்து ஆராய்க. நவீன மனித உரிமைகள் மேற்கத்தேய அல்லாத கலாசாரங்களின் ஒழுக்க விழுமியங்களை குறைத்து மதிப்பிட்டு ஐரோப்பவாத பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது என நீர் கருதுகிறீரா? உதாரணங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

( 20 புள்ளிகள்)

4. பெடரேசியா ஒரு அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடாக இருப்பதுடன் பாராளுமன்ற முறையை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தை உடையது. குறிப்பிட்ட நாடு பல தசாப்தங்களாக அரசாங்கத்தினுடைய பிரதிநிதித்துவ நிறுவனங்களைக் கொண்டிருந்த போதிலும், தெரிவு செய்யப்பட்ட அரச அமைப்புகளில் பெண்களுடைய பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்களவு குறைவு என விமர்சகர்கள் அவதானித்துள்ளனர். இதனை ஒரு பிரச்சினையாக இனங்கண்ட பல பெண்கள் உரிமைகள் ஆர்வலர்கள் “ பெண்களுடைய தளம்” என்பதை பாராளுமன்றம் மற்றும் ஏனைய பிரதிநிதித்துவ அமைப்புகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு ஒரு இடஒதுக்கீட்டு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துமாறு தொழிற்படுவதற்காக ஒருங்கிணைந்தது. அதற்கமைய அவர்கள் ஒவ்வொரு சபையிலும் 25% இட ஒதுக்கீடு பெண்களுக்கு இருக்க வேண்டும் எனவும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் அவர்களுடைய தேர்தல் பட்டியல்களில் அதிகமான பெண்

வேட்பாளர்களை உள்ளடக்க வேண்டும் என்ற கட்டாயமான ஏற்பாட்டையும் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆலோசனையை பிரேரணை செய்தனர். எவ்வாறாயினும் "மஞ்சள் கூட்டமைப்பு" என்ற ஒரு அரசியல் கட்சி இந்த உத்தேச திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, அத்தகைய முதன்மைப்படுத்திய நடாத்துகை ஆண் மற்றும் பெண் ஆகியோருக்கிடையிலான சமத்துவ கருத்தை மீறுகிறது என வாதிடுகின்றனர்.

எந்தவொரு பெண்ணும் அவள் விரும்பினால் பொது பதவியை வகிப்பதற்கு போட்டியிட உரிமையுடையவள். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், பெண்களின் முதன்மை நடாத்துகையானது ஆண்களுக்கு எதிரான பாரபட்சமாக அமையும்.

இட ஒதுக்கீட்டு கோரிக்கையை நியாயப்படுத்தி அறிக்கையொன்றை தயாரித்து அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பதற்கான பெண்கள் தளம் சார்பில் அறிக்கையை தயாரிக்க நீர் ஒரு சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளீர். நீர் தயாரிக்கின்ற அறிக்கையில் இடம் பெற வேண்டிய முக்கியமான விடயங்களைக் குறிப்பிடுக. உமது நிலையை சமர்ப்பிப்பதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ஏற்பாடுகளை குறிப்பிடுமாறு நீர் எதிர்பார்க்கப்படுகிறீர். பெடரேசியா அரசியல் அமைப்பு இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பை ஒத்தது என கருதுக. மேலும் இந்நாடு குடியியல் , அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR) மற்றும் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சங்களுக்கும் எதிரான சமவாயம் (CEDAW) ஆகிய சமவாயங்களை கைச்சாத்திட்டுள்ளது.

(20 புள்ளிகள்)

5. அரசுகள் மனித உரிமைகள் சமவாயங்களை கைச்சாத்திடும் ஆயின் அடிக்கடி அவற்றின் அமுலாக்கத்தை உள்நாட்டு அளவில் தவிர்த்து விடுகின்றன. சர்வதேச மனித உரிமைகள் சட்ட பரப்பு அரசு திறந்தவர்கள் சமவாயங்களின் ஏற்பாடுகளை மதித்து நடக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறுபட்ட பொறிமுறைகளைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும் இத்தகைய பொறிமுறைகளின் வினைத்திறன் அரசு திறந்தவர்கள் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடன் எந்தளவு இணங்கி நடக்கின்றார்கள் என்பதில் தங்கியுள்ளது ஏனெனில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு முறைமையில் எந்தவித உறுத்தங்களும் இணைந்து காணப்படவில்லை.

   நீர் மேலே தரப்பட்ட கூற்றுடன் இணங்குகிறீரா? ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பு அமைப்புகளுடைய அதிகாரங்கள் மற்றும் பணிகள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி உமது விடையை விளக்குக.

(20 புள்ளிகள்)

6. 'அனைத்து அரச திறந்தவர்களும், அனைத்து பிள்ளைகளினது தொடர்ந்து வாழ்தல் மற்றும் அபிவிருத்தியை எல்லா இடங்களிலும் ஆகக்கூடிய அளவு இருப்பதை உறுதிப்படுத்தாது. அனேகமாக ஒவ்வொரு சூழலிலும், பிள்ளைகள் இன்னும் பராமரிப்பு தொடர்பில் செயலற்ற பெறுநர்களாக நோக்கப்படுவதோடு அவர்களுடைய குரல்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன அல்லது புறக்கணிக்கப்படுகின்றன. [..] பிள்ளைகள் குறிப்பாக ஆட்கடத்தல் மற்றும் அடிமைத்தனத்திற்கு

இலக்காகக்கூடியவர்கள் இது மிக மோசமான வகையான கட்டாய வேலை, பாலியல் அடிமைத்தளம் மற்றும் கட்டாய திருமணம் என்பவற்றையும் உள்ளடக்கும்.'

- Michelle Bachelet (United Nations High Commissioner for Human Rights). Opening statement at the 80th session of the Committee on the Rights of the Child, 14 January 2019.

மேலே தரப்பட்ட சாரம் சமகாலங்களில் பிள்ளைகளுக்கான ஒரு கௌரவமான வாழ்வை உறுதிப்படுத்துவதில் மனித உரிமைகள் சமூகம் எதிர்நோக்கும் சில சவால்களை எடுத்துக்காட்டுகிறது. சிறுவர் உரிமைக்கான சமவாயம் (1989) பிள்ளையொன்று வெறுமனே கவனத்தை செயலற்ற வகையில் பெறுபவர் என்பதற்கு எதிராக ஒரு உரிமையுள்ளவர் என்பதை அங்கிகரிப்பதன் மூலம் பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு எதிர்கால சாத்தியப்பாட்டுக்கான கட்டமைப்பை எந்தளவு தூரம் வழங்குகிறது என்பதை ஆராய்க.

7. வெர்சோ குடியரசானது அரச படைகளுக்கும் ஒரு ' வெர்சோவின் சுதந்திர போராட்டக்காரர்கள்' (FFV) என்ற போராளி கிளர்ச்சி அமைப்பொன்றுக்கும் இடையில் ஏற்பட்ட சிவில் யுத்தம் ஒன்றை எதிர்கொண்ட நாடாகும். லியோன் என்பவன் சிறு அளவில் வியாபாரத்தை மேற்கொள்ளும் ஒரு வியாபாரி ஆவான். அவன் கிளர்ச்சியாளர்கள் செல்வாக்கு செலுத்திய பிரதேசத்திற்குள் வாழ்ந்தான். 2013 ஜனவரியில், கிளர்ச்சியாளர்களுடன் லியோன் இணைந்து செயற்படுகின்றான் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவப் பொலிசாரினால் ஒரு சோதனைச் சாவடியில் வைத்து அவன் கைது செய்யப்பட்டான். அவன் உத்தியோகபூர்வமற்ற தடுப்பு முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டு மூன்று மாதம் தடுப்பில் வைக்கப்பட்டிருந்தான். அவன் ஒரு சட்டத்தரணியையோ அல்லது உறவினர்களையோ பார்க்க அனுமதிக்கப்படவில்லை. மேலும் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவில்லை. தடுப்புக்காவலில் இருந்த போது தினந்தோறும் கடுமையான அடிக்கு உள்ளானான். மேலும் அவன் FFV உடைய உறுப்பினர் என குறிப்பிடப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் பலவந்தமாக கையொப்பமிடுமாறு பணிக்கப்பட்டான். குற்ற ஒப்புதலை பெற்றபின்பு, லியோன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டான். நீதிமன்றம் அவனை அரச தடுப்பு முகாமில் வைக்குமாறு கட்டளையிட்டது. லியோன் தடுப்புக் காலப்பகுதியில் கடுமையான அடிக்காளானான் எனக் குறிப்பிட்ட போதிலும் இந்த கோரிக்கை மீது நீதவான் கவனம் செலுத்தவில்லை. பின்பு லியோனுக்கு எதிராக பயங்கரவாத அடக்குதல் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இச்சட்டம் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளான சட்டமாக இருந்ததோடு, இச்சட்டம் ஏனையவற்றுடன், சந்தேக நபர் கட்டுக்காவலில் இருந்தபோது வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நீதிமன்றத்தில் சான்றாக அனுமதிக்கப்படும் என்ற ஒரு ஏற்பாட்டை கொண்டிருந்தது. வழக்கு விசாரணையின் போது அவனால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதலில் பெருமளவில் தங்கியிருந்து லியோன் குற்றவாளியாக காணப்பட்டான்.

அதனையடுத்து 20 வருட சிறைத் தண்டனைக்கு லியோன் உள்ளாக்கப்பட்டான். உயரிய நீதிமன்றத்திற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது. லியோன் தன்னுடைய உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நம்புவதுடன் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தனிப்பட்ட தொடர்பாடல் ஒன்றை சமர்ப்பிப்பதற்கான சாத்தியப்பாட்டை பற்றி அறிய விரும்புகிறான்.

லியோன் எந்த அடிப்படைகளின் மீது தொடர்பாடல் மேற்கொள்ள முடியும் என்பதை குறிப்பிட்டு உமது சிரேஷ்ட சட்டத்தரணிக்கு ஒரு சட்ட சுருக்கவுரையை உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சாதனங்களின் உதவியுடன் தயாரிக்க. உமது சுருக்கவுரையில் வேர்சோ குடியரசு மனித உரிமைகள் ஆணைக்குழுவுடைய பரிந்துரைகளினால் கட்டுப்படுமா என்பதை நீர் விளக்க வேண்டும். வேர்சோவின் சட்ட முறைமை இலங்கையைப் போன்றது எனக்கருதுக. அத்துடன் இக்குடியரசு குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் (ICCPR) மற்றும் அதனுடைய முதலாவது விருப்பத் தெரிவேட்டையும் கைச்சாத்திட்டுள்ளது.

(20 புள்ளிகள்)

8. அ. சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளில் இருந்து விலகி நிற்றல் (Derogation)

ஆ. மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கான தொடர்பு

இ. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் கடமையை நிறைவேற்ற வேண்டியவர்கள் (Duty bearers)

(10X2 = 20 புள்ளிகள் )

- பதிப்புரிமை பெற்றது -